Enrich, XIII (II): 1 - 5, Jan – June, 2022

# பாரதியின் பக்தி நெறி (கண்ணன் பாட்டு)

இ. வாசுகி, தமிழ்த்துறை
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

## ஆய்வு முன்னுரை

'பக்தியின் மொழி தமிழ்' என்பது தமிழ்த்தூதுவர் தனிநாயகம் அடிகள் அவர்களின் வாக்கு. உண்மையான பக்தியினாலே இறையருள் பெற்ற ஆன்றோர்கள் பலர் உண்டு. இறைவனிடம் அவன் உயரத்திற்குச் சென்றுதான் பக்தி செலுத்த வேண்டும் என நம் முன்னோர்கள் நம்பவில்லை. கடவுளைத் தங்களோடு இணைத்துக் கொண்ட பக்தி நிலை நம்மவர்களது உன்னதமான பக்தி நிலை. பாரதியும் இவ்வழியையே பின்பற்றி தம் மனம் போன போக்கில் பக்தி செலுத்தினார். ஆனால் அது எளிமையான பக்தி நெறியாக அமைந்தது. 'பக்தியினாலே மேன்மை எய்தலாம்' என்ற பாரதியின் கூற்றை நிரூபிப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

## ஆய்வு நோக்கம்

பாரதியின் எளிமையான எதார்த்தமான பக்தி நிலையை வாழ்வியலோடு இணைத்த பக்தி நெறியை கண்ணன் பாட்டின் மூலம் மெய்ப்பிப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆய்வுப் பொருண்மை

மக்களின் வாழ்வியலோடு இணைந்த பக்திநெறியை கண்ணன் பாட்டின் வழி ஆராய்வது இவ்வாய்வுப் பொருண்மையாக அமைகிறது.

## பாரதியும் பக்தியும்

நமக்குத் துன்பம் வரும்போது இறைவனை அதிகமாக நாடும் இயல்பையே மனிதர்கள் வழக்கமாகக் கொண்டுள்ளனர். சித்தர்களும், ஞானிகளும், யோகிகளும் அந்நிலையிலிருந்து மாறுபட்டவர்கள். எப்போதும் இறைச் சிந்தனையுடனேயே இவ்வுலகில் உலாவிக் கொண்டிருப்பவர்கள். பாரதியின் பக்தியும் அத்தகையதே. பக்தியினால் விளையும் நன்மைகளை பாரதி தனியாகப் பட்டியலிடுகிறார்.

நமக்கு மேலே நம்மை மீறிய ஒரு சக்தி உள்ளதை நாம் அனைவரும் நம்புகிறோம். அச்சக்தியை வெவ்வேறு உருவங்களிலும், வெவ்வேறு பெயர்களிலும் வழிபடுகிறோம். கடவுளரின் பெயர்களும் உருவங்களும் தான் வெவ்வேறே தவிர அனைவரின் பக்தியும் ஒன்றுதான். பக்தியினால் வரும் நன்மை மட்டும்தான் நாம் செய்யும் வினைக்கேற்ப மாறுபடும். இதனை பாரதியின் வழியில் பார்த்தோமானால்,

'பக்தியினாலே - இந்தப்
பாரினி லெய்திடும் மேன்மைகள் கோடி!
சித்தம் தெளியும் - இங்கு
செய்வது அனைத்திலும் செம்மை பிறந்திடும்' 1 (பாரதியார் கவிதைகள் பக்:117)

இறைவன் மேல் நம்பிக்கை இருந்தால் நிச்சயம் நாம் நினைத்ததெல்லாம் நடக்கும். மனித வாழ்வில் நிலவும் துன்பங்களையெல்லாம் பக்தியால் போக்கலாம். இன்பங்களையெல்லாம் வருவிக்கலாம். பெறவேண்டியதையெல்லாம் பெறலாம். நீக்கவேண்டியதையெல்லாம் நீக்கலாம் என்பது பாரதியின் நம்பிக்கை.

‘----------------- நெஞ்சில்
சஞ்சல நீங்கி உறுதி விளங்கிடும்’
‘கல்வி வளரும் - பல
காரியங் கையுறும் வீரிய மோங்கிடும்
அல்ல லொழியும்’
‘சோம்ப லழியும் - உடல்
சொன்ன படிக்கு நடக்கும்’

இதைப் போல இன்னும் பலப்பல நன்மைகள் உண்டாகுமானால் மனிதர்கள் அனைவரும் வாழ்வில் முயற்சியோடு சேர்த்துப் பக்தியையும் பெருக்கலாம். வாழ்வின் தேவையைக் குறிக்கோளை முயற்சியால் அடையமுடியாதவர்கள் பக்தியினாலாவது அடையலாம் என்பது இதன் மூலம் புலப்படுகிறது. உண்மையான இறைபக்தி இருந்தால் எவ்வளவு பெரிய சாதனையையும் நிகழ்த்தலாம் என்பது பாரதி பார்வை.

**தோள் கொடுப்பான் கண்ணன்**

தம்பிரான் தோழர் என்று அழைக்கப்பட்ட சுந்தரர் சிவபெருமான் மீது தீரா நட்புடையவராக விளங்கினார். சிவபிரானும் சுந்தரரை தோள் கொடுத்துக் காத்தார்.

இங்கே பாரதி ஒருபடி மேல் சென்று கண்ணனைத் தோழனாகக் கூடவே வைத்திருக்கிறார். யாரிடமும் சொல்லமுடியாத செய்திகளையெல்லாம் தோழனிடம்தான் பகர முடியும். எதையும் எதிர்பாராமல் செய்பவன் தான் தோழன். கண்ணன் பாரதிக்கு மிகப்பெரிய தோழனாக தோள் கொடுத்திருக்கிறான்.

‘ஊனை வருத்திடு நோய்வரும் போதினில்
உற்ற மருந்து சொல்வான் - நெஞ்சம்
ஈனக் கவலைக ளெய்திடும் போதில்
இதஞ்சொல்லி மாற்றிடுவான்’ 2 (பா.க. பக்:246)

கண்ணா கண்ணா என்று நான் அழைக்கும் போதெல்லாம் அரை நொடிக்குள் ஓடி வருவான்.

'ஆட்டங்கள் காட்டியும் பாட்டுகள் பாடியும்
ஆறுதல் செய்திடுவான்' 3 (பா.க. பக்:247)

ஒரு உண்மையான நண்பனின் வேலை என்னவோ அதைக் கண்ணன் சரியாகச் செய்திடுவான் என்று பாரதி இதையெல்லாம் கற்பனையில் அனுபவிக்கிறார்.

சிறந்த நட்பு என்பது ஒருவன் தவறு செய்யும் போது அவனை இடித்துத் திருத்தும் பணியைச் சரியாகச் செய்ய வேண்டும்.

'உள்ளத்திலே கருவங் கொண்ட போதினில்
ஓங்கி யடித்திடுவான்
கள்ளத்தைக் கொண்டொரு வார்த்தை சொன்னாலங்கு
காறி யுமிழ்ந்திடுவான்' 4 (பா.க. பக்:247)

கண்ணன் என் மேல் கொண்ட நட்பு என்னைத் திருத்துகின்ற நட்பு என்கிறார் பாரதி. கண்ணனின் தோழமை தன்னை நல்வழிப்படுத்தியதாக பாரதி கூறுகிறான். பாரதியின் கண்ணன் சிறந்த தோழன். தோழன் மட்டுமா?

**அன்புள்ள தாய் கண்ணன்**

கடவுளுக்கும் முதலாக வைத்துக் காக்கப்படுவது அன்னையின் அன்புதான். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்பது ஆன்றோர் வாக்கு. தாய் என்பவள் தனக்கென எதையும் செய்யாமல் பிள்ளைகளுக்காகவே அனைத்தையும் செய்யும் பண்புள்ளவள். பாரதியின் கண்ணன் தாயாக அவருக்கு என்னவெல்லாம் செய்கிறாள்.

'வேண்டிய கொடுத்திடுவாள் - அவை
கொடுத்திட விரைந்திடுவாள்' 5 (பா.க. பக்:251)

தாயின் அன்புக்கு ஈடில்லை. பாரதியின் கண்ணனும் பாரதிக்கு அப்படித்தான். தாயாகிய கண்ணனைப் பாடினால் நீண்டதோர் புகழும், நிகரறு பெருமையும் அவள் கொடுப்பாள் என்பது பாரதியின் நம்பிக்கை கலந்த தாயன்பு.

**என் தந்தை கண்ணன்**

தந்தை என்பவர் அன்பை உள்ளே மறைத்து வைத்துக் கொண்டு பிள்ளையை அறிவினாலே வழிநடத்துபவர்.

நல்வழியில் பொருள் சேர்த்து அதைக் கற்ற கல்வியால் பாதுகாத்து சிறக்கச் செய்வது தந்தையின் கடமையாகும். கண்ணன் தந்தையாக எனக்கு அறிவுரை கூறி, சில நேரங்களில் கடுமையாக நடந்து கொண்டாலும் அது எனக்குப் பின்னாளில் நன்மையையே உண்டாக்கியது என்கிறார் பாரதி.

'நல்வழிச்செல்லுபவரை - மனம்
நையும்வரை சோதனைசெய் நடத்தையுண்டு' 6 (பா.க. பக்:252)

தங்கம் புடம் போடப் போட நன்கு ஒளிரும். அதுபோல் தான் மனிதனும். சோதனை பெற பெறத்தான் அவனது சாதனை வெளிப்படும் என்ற தத்துவத்தைப் பாரதி கண்ணன் மேலுள்ள பக்தியின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

**சேவகன் கண்ணன்**

கடவுளை மனிதரிடமிருந்து பிரித்து மிகப் பெரிய நிலையில் வைக்கும் பக்தி தமிழர்களுடையது அல்ல. மனிதனோடு மனிதனாக வைப்பது தான் நம் இறைக் கொள்கை.

பாரதி கண்ணனை இன்னும் நெருங்கிச் சென்று தனது சேவகனாகப் பார்த்தார். கண்ணன் தன் வேலைகளைச் செய்து விட்டு காதல் தான் பெரிது காசு பெரிதில்லை என்பான்.

'காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை என்பான்' 7 (பா.க. பக்:255)

சேவை செய்யத்தான் என் வீட்டிற்கு வந்தான் கண்ணன். அவனுக்குக் காசு பெரிதில்லை. ஆனால் எங்கிருந்து வந்தானென்று தெரியவில்லை. அவனிடம் கேட்டால் அவனும் இடைச்சாதி என்று மட்டும் கூறுகிறான். சேவகனாக வந்து எல்லாமுமாக இருக்கிறான்.

'எங்கிருந்தோ வந்தான்
இடைச்சாதி என்று சொன்னான்
இங்கிவனை யான்பெறவே
என்னதவஞ்செய்துவிட்டேன்' 8 (பா.க. பக்:256)

இவ்வுலகில் கண்ணன் எல்லாமுமாக எனக்கிருந்து என்னை ஆட்கொண்டான். கண்ணனுக்கும் பாரதிக்கும் எவ்வளவு நெருக்கம். இதெல்லாம் பக்தியினால் விளைந்தது.

**யாதுமாகி நின்றான் கண்ணன்**

பாரதிக்குக் கண்ணன் அனைத்து உறவுகளுமாகி நின்றான்.

**அரசன்**

அரசாயிருந்து அனைத்தும் காத்திட்டான்.

**சீடன்**

சீடனாயிருந்து சீர்பல அளித்தான். ஆனாலும் இறுதியில் என்சொல் கேட்டு சீர்பெற்றான்.

**குழந்தை**

சீர்பெற்று வாழ்வதற்கே உன்னைப்போல் செல்லம் பிறிதுண்டோ?.

**விளையாட்டுப்பிள்ளை**

எல்லாவற்றையும் விளையாட்டாகச் செய்து என்னை விம்ம வைப்பான்.

**காதலன் காதலி**

காதலன் காதலியாகி நின்று என்னைக் கிறங்கடித்தான்.

**யாதுமாகி நின்ற கண்ணன்**

பாரதியின் உயிருள்ளும் நின்றான்; உணர்வுள்ளும் நின்றான். பாரதியின் இறை நெறி எதார்த்தமானது. ஆனால், உணர்வுப்பூர்வமானது.

**ஆய்வு முடிவுகள்**

ஆழ்வார்களின் இறைநெறியும் நாயன்மார்களின் இறைநெறியும் இறைவனை இறைநெறியிலேயே வைத்துப் பார்த்த நெருக்கமுடையது. பாரதியின் இறைநெறியோ இறைவனை மனித வாழ்வியல் நெறியிலேயே பார்த்த நெருக்கமுடையது. பாரதியின் இறைநெறி ஆரவாரமில்லாதது. நேர்மையானது. தனக்கு வேண்டியதை வெளிப்படையாகவே இறையிடம் கேட்கும் இயல்புடையது. மனிதனுக்கும் இறைக்கும் இடைவெளியே இல்லாதது. வேறு எவரும் வேண்டாத விதத்தில் இறைவனை வேண்டுவார். பாரதியின் இறை நம்பிக்கை மிக மிக முழுமையானது.

மனதில் இறைமேல் பயமில்லாமல் முழுமையான நம்பிக்கையான பக்தியை மட்டுமே கொண்டிருக்கும் பாரதியின் இறைக் கொள்கைக்கு ஈடேதுமில்லை.

**அடிக்குறிப்பு**

1. பாரதியார் கவிதைகள் பக்கம்: 117
2. பாரதியார் கவிதைகள் பக்கம்: 246
3. பாரதியார் கவிதைகள் பக்கம்: 247
4. பாரதியார் கவிதைகள் பக்கம்: 247
5. பாரதியார் கவிதைகள் பக்கம்: 251
6. பாரதியார் கவிதைகள் பக்கம்: 252
7. பாரதியார் கவிதைகள் பக்கம்: 255
8. பாரதியார் கவிதைகள் பக்கம்: 256

**பார்வை நூல்**

பாரதியார் கவிதைகள்,
தொகுப்பாசிரியர்,
கவிஞர் பத்மதேவன்,
காளீஸ்வரி பதிப்பகம்,
சென்னை.